| | | |
|---|---|---|
| சாட்சி : PW 2<br>திரு.ராபர்ட்<br>த/பெ.திரு.ஆப்ரகாம் | அ.வ.எண். 314/2005 | 22.07.2026 |

இ.ம.எண்.10/2026 மனு 22.07.2026 இன்று அனுமதிக்கப்பட்டதன் பேரில் வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, 1, 2, 5, 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2ன் குறுக்கு விசாரணை

1) இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கை தாக்கல் செய்தது யார் என்றால் ஸ்டீபன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் வண்டிப்பாதை உள்ளதாகவும், பொது மக்கள் பயன்பாட்டில் இருந்து வருவதாகவும், அது கிழமேலாக நீண்டுள்ளதாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். வாதி ஸ்டீபனின் வீடு மேலதெரு மேல்சரகில் கிழக்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான்.

2) மேலத்தெரு வழியாக வாதி வீட்டிற்கு சென்றுவிடலாம் என்றால் சரிதான். வாதி எனக்கு உறவினரா என்றால் இல்லை, நன்கு பழக்கமானவர். எனது ஊர் வேறு என்றால் எனது ஊர் இடையாற்றுமங்கலம். வாதியின் ஊரில் வாதியின் வீட்டிற்கு செல்வதை தவிர வேறு வேலை இல்லை என்றால் சரிதான். வாதி எனது நெருங்கிய நண்பர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) தாவா பாதையின் நீளம், அகலம் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். அது குறித்து எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் நான் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான்.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.